இருக்கிற காரணத்தால், மிக அதிக அளவிலான செலவுகள் செய்து, அத்தகைய பாலங்களைக் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள அத்தகைய பெரிய பாலப் பணிகளை, ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் எடுத்துச் செய்யாமல், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துச் செய்வதற்கான நடவடிக்கையை நமது அரசு எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலைகளில் எல்லாம், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாலங்கள் எல்லாம், ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் குறுக்கிடுகின்ற பாலங்களாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

288—

கால்நடை மருத்துவமனை

***6989—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இப்பகுதியில், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000—க்கு மேற்பட்டு இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவமே, நீதியின் குருகுலமே, சுட்டெரிக்கும் சூரியனை வீழ்த்திய எங்கள் கார்மேகமே, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சிந்தனையை உருவாக்கிய ஐந்தாவது வேதமே, மாட்சிமை பொருந்திய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாத மலர்களை வணங்குகிறேன். நான் இந்தக் கேள்வியை கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்கு முன்பாக, ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அனுமதியளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

இணை மின் உற்பத்தி

***22230—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—